1990 மே 10]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம். திருவாரூர் 66/11 கி.வோ.ஆ. துணை மின் நிலையத்தில் உள்ள குறைந்த திறன் கொண்ட மின் மாற்றிகளை அதிக திறன் கொண்ட மின் மாற்றிகளாக மாற்றியமைக்கும் திட்டம் இருக்கிறது.

(ஆ) தற்போது திருவாரூரில் உள்ள 3X2.5 மெ.வோ.ஆ. (7.5 மெ.வோ.ஆ) மின் மாற்றிகள் (12.5 மெ.வோ.) திறன் கொண்டவைகளாக மாற்றப்பட உள்ளது. இதற்குத் தேவையான ஒதுக்கீடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் விரைவில் செய்து முடிக்கப்பட உள்ளன.

9–50 மணி

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது சொன்னார்கள், திருவாரூரில் இருக்கக் கூடிய துணை மின் நிலையத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு அதை விஸ்தரிப்பதற்கான முறையில் புதிய மின் மாற்றிகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. 3.25 இருப்பதை 12.5 ஆக மாற்று வதற்கான முயற்சிகள் நடப்பதாகச் சொன்னார்கள். அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். விரைவில் திட்டம் முடிக்கப்படும் என்று சொன்னார்கள். நான் தெரிந்துக்கொள்ள விரும்புவது இந்தத் திட்டம் எப்போது துவக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இதற்கான நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அடுத்து பணிகள் மேற்கொள்ளப்படும். எனவே விரைவில் திட்டம் முடிக்கப்படும்.

அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம்.

*9797 திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சைதை தொகுதி, கிண்டி திரு. வி. க. தொழிற்பேட்டையில் அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம் கட்டப்பட்டு வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், கட்டுமானப் பணி எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இன்னும் இரண்டு திங்களில் முடிவடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: தலைவர் அவர்களே, இந்திய திரு நாட்டில் தமிழகமானது தொழில் துறையில் முதலிடம் பெற வேண்டும் என்கின்ற உணர்வோடு கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அயராது பாடுபடுகிறார்கள். தொழில் துறைக்கு மிகவும் அவசியமான இந்த அலுவலகங்கள் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அடிப்படையில் விரிவு செய்யப்பட வேண்டும். ஏனெனில் கடந்த 20 அல்லது 25 ஆண்டுகளாக முக்கியமாக இந்த அலுவல கங்கள் விரிவுபடுத்தப்படாமல் இவற்றின் வேலைத்திறன் பாதிக்கப் பட்டு உள்ளது. தலைவர் கலைஞர் அவர்களின் எண்ணம் ஈடேறத் தக்கவகையில் மிக அவசியமான அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இந்த அலுவலகங்களை விரிவுபடுத்த இந்த அரசு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் 2 மாதத்தில் செய் கிறோம் என்று சொல்கிறார். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, டிபார்ட் மெண்ட் எக்ஸ்பேன்ஷன் வேண்டும் என்று கேட்கிறார்கள். அது தானே கேட்கிறீர்கள்? உறுப்பினருடைய யோசனை நல்ல கருத்து. அதை இலாக்கா பரிசீலிக்கும்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: தலைவர் அவர்களே, அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்திருப்பது போல் சப்டிவிஷன் அலுவலகங்கள் அமைக்கப்பட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அதையும் அரசு பரிசீலிக்கும்.

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

* 1898 திருமதி ரமணி நல்லதம்பி:
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாங்குனேரியைச் சேர்ந்த இட்டமொழி விஜய அச்சம் பாடு ஊராட்சியைச் சேர்ந்த இட்டமொழியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?